# பொதுக்காலம் 5ம் ஞாயிறு.

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

யோபு நூலிலிருந்து வாசகம் 7: 1-4,6-7,
திபா 147: 1-2. 3-4. 5-6,
திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய
முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 9: 16-19, 22-23,
மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 1: 29-39

## திருப்பலி முன்னுரை:

இறைமகன் இயேசவின் அன்புக்கும் அரவணைப்புக்கும் முற்றிலும் உரிய சகோதரர்களே சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

படைப்பிற்கெல்லாம் சிறந்த படைப்பாக மனிதனை உருவாக்கிய இறைவன் அவருடைய சாயலை மனித உருவில் வைத்தார். அதனால்தான் மற்ற உயிரினங்களை விட மனிதர்மேல் அதிக அன்பு வைத்து இந்த மண்ணுலகை ஆள மனிதனைப் பணித்தார். அதற்கேற்றவகையில் பகுத்தறியும் ஆற்றலும், பலவகைத் திறன்களும் அவனுள் இருக்கச் செய்தார். இந்த திறன்களால் ஒருவர் ஒருவரை விஞ்சி நிற்காமல் சமநிலை ஏற்பட ஒருவர் ஒருவருக்கு உதவுதல் எனும் பணிபுரிதலின்மூலமும், அதற்குக் காரணமாக இறை உறவைக் கொண்டிருத்தலின் மூலமும் தன் பணித்திட்டத்தை நிறைவேற்றச் செய்கிறார். ஆண்டின் பொதுக்காலம் 5 ஆம் வாரத்தில் இறைமக்கள் இந்த சிந்தனைகளை மனதில் இருத்தி இறை உறவுடன் மக்கள் நலப் பணிசெய்து வாழ திருச்சபை நம்மை அழைக்கிறது. தனிமையான இடத்தில் இறைவேண்டுதல் வழியாக இயேசு ஆற்றல் பெற்றது போல நாமும் குறிப்பாக நமது குழந்தைகள் ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ இப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**01. அனைவரும் என்னைப் போல் நற்செய்தியை அறிவியுங்கள் என்று சொன்ன எம் இறைவா!**

உம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் பொதுநிலையினர் அனைவரும் உம்மைப்போல வாழ்ந்து தங்களது வாழ்வால் மற்றவருக்கு நற்செய்தியை அறிவித்திட தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**02. எங்களையெல்லாம் பராமரிக்கும் நல்தெய்வமே,**

நாங்கள் வாழுகின்ற நிலையில் மற்றவரின் உணர்வுகளை மதிக்கவும் தனி மனித சுதந்திரத்திற்கு மதிப்புக் கொடுக்கவும் தேவையான அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**03. இரக்கமுள்ள இறைவா!**

இரக்கமுள்ள இறைவா எங்கள் ஊரில் வாழும் குடும்பத்தார்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பு செய்துவாழவும், அவர்களில் உம் அன்பை பெற்றிடவும், அவர்களுக்கு என்றும் ஆதரவாக அவர்கள் உற்றார் உறவினார்கள் இருக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**04. உடைந்த உள்ளத்தோரைக் குணப்படுத்தி, அவர்களின் காயங்களைக் குணமாக்குகின்ற தந்தையே இறைவா!**

வேதனை, பழிவாங்கும் உணர்வு, விட்டுக் கொடுக்காமை, புரிந்துணர்வின்மை, பிரிந்து வாழும் மனநிலை, வன்முறை ஆகிய தீமைகளால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லோரையும் குணப்படுத்தி, அவர்கள் மத்தியில் நிலையான அன்பும், உறவும் உருவாகிட, அவர்களை ஆட்கொண்டு வழிநடாத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**05. வெற்றி என்னும் இலக்கில் எம்மை வழிநடத்தும் இறைவா!**

நாங்கள் வாழும் இந்த நவீன உலகில் இளைஞர்கள் சந்திக்கும் எண்ணற்றத் துன்பங்கள், சோதனைகள் அனைத்தையும் முறியடித்து, தமது வெற்றி இலக்கான இயேசுவைத் தேடிவரவும், தங்கள் பெற்றோர்களுக்கும் நற்பெயர் பெற்றுத் தரவும், தூயவாழ்வு வாழ்ந்திட அருள்வளங்களைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.